# மக்கள் சாசனம் – 2016

## கைத்தறி மற்றும் துணிநூல் துறை

### 1. முன்னுரை

கைத்தறி மற்றும் துணிநூல் துறையானது பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதுடன், கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் வளர்ச்சி மற்றும் நெசவாளர்கள் மற்றும் இத்துறைத் தொடர்புடையவர்களுடைய நலனை காப்பதற்கும் பொறுப்பானதாகும். அரசின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்த திட்டமிடுதல், முறைப்படுத்துதல், ஒருங்கிணைத்தல், நடைமுறைபடுத்துதல் மற்றும் மேற்பார்வையிடல் போன்ற கடமைகள் கைத்தறி மற்றும் துணிநூல் துறை சார்ந்ததாகும். கைத்தறி தொழிலின் பாதுகாப்பு, வளர்ச்சி, உயர்வு மற்றும் கைத்தறி நெசவாளர்களின் நலன் ஆகியவற்றிற்கெனப் பல்வேறு திட்டங்களை வகுத்து, அவற்றை பிரதம மற்றும் தலைமை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் வாயிலாக ஒருங்கிணைத்து செயல்படுத்தும் பொறுப்பு கைத்தறி மற்றும் துணிநூல் துறையைச் சார்ந்ததாகும். கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், “மாநிலத்தின் துணிநூல் அதிகாரியாக” செயல்படுவதன் வாயிலாக நூற்பாலைகள், துணிநூல் ஆலைகள், பின்னலாடைத் தொழில், கைத்தறி மற்றும் விசைத்தறித் தொழில் நன்முறையில் செயல்படத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பும் இத்துறைக்கு உள்ளது. அரசின் அனைத்து திட்டங்களையும் திட்டமிட்டு வகுத்தல் மற்றும் நிர்வகிக்கும் பொறுப்புகளை கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரகம் கவனித்து வரும் நிலையில், சரக அளவில் அரசின் கொள்கைகள் மற்றும் இயக்குநரின் உத்தரவுகளை செயல்படுத்துவதுடன் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகளையும் 20 சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்கள் கண்காணித்து வருகின்றனர்.

தலைமை அலுவலகத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு உதவியாக கீழ்கண்ட அலுவலர்கள் பணிபுரிகின்றனர்:-

(அ) கூடுதல் இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல்

(ஆ) இணை இயக்குநர் (கைத்தறி)

(இ) இணை இயக்குநர் (சீருடை)

(ஈ) இணை இயக்குநர் (துணிநூல்)

(உ) இணை இயக்குநர் (சிறப்பு பணி)

(ஊ) நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர் (நிதித்துறையின் துணைச் செயலாளர் பதவி நிலையில்)

(எ) துணை இயக்குநர் (துணிநூல்) மற்றும்

(ஏ) ஐந்து உதவி இயக்குநர்கள் (தலைமையிடம்) (நிர்வாகம்) (விசைத்தறி) (துணிநூல்) மற்றும் (சீருடை)

மாவட்ட அளவில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை மாநிலம் முழுவதும் 20 சரகங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு சரகமும் கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர் / உதவி இயக்குநர் பதவி நிலையில் உள்ள அலுவலர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன. கைத்தறித் துறைக்கான அரசின் கொள்கைகள் மற்றும் அரசால் தீட்டப்படும் பல்வேறு நல மற்றும் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பில் சரக அலுவலர்கள் உள்ளனர். 20 சரகங்களின் விவரம் பின்வருமாறு:-

**(அ) துணை இயக்குநர் அளவிலான சரகங்கள்**

1. காஞ்சிபுரம் 2. சேலம்

**(ஆ) உதவி இயக்குநர் அளவிலான சரகங்கள்**

| | | |
|---|---|---|
| 1. திருவள்ளூர் | 2. வேலூர் | 3. திருவண்ணாமலை |
| 4. கடலூர் | 5. கும்பகோணம் | 6. திருவாரூர் |
| 7. திருச்சிராப்பள்ளி | 8. கரூர் | 9. திருச்செங்கோடு |
| 10. ஈரோடு | 11. திருப்பூர் | 12. கோயம்புத்தூர் |
| 13. திண்டுக்கல் | 14. மதுரை | 15. பரமக்குடி |
| 16. விருதுநகர் | 17. திருநெல்வேலி | 18. நாகர்கோவில் |

கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985–ஐ செயல்படுத்த தனியாக ஒரு அமலாக்கப் பிரிவு சென்னையை தலைமை இடமாகக் கொண்டு துணை இயக்குநர் பதவி நிலையில் ஒரு அமலாக்க அலுவலரும், கீழ்க்கண்ட ஐந்து இடங்களில் உதவி இயக்குநர் பதவி நிலையில் சரக அமலாக்க அலுவலர்களும் செயல்பட்டு வருகின்றனர்.

| | |
|---|---|
| 1. | சேலம் |
| 2. | திருச்செங்கோடு |
| 3. | ஈரோடு |
| 4. | திருப்பூர் |
| 5. | மதுரை |

இத்துறையின் நிர்வாக கட்டுப்பாட்டில் கீழ்க்காணும் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் இயங்கி வருகின்றன:–

1) தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் (கோ–ஆப்டெக்ஸ்), சென்னை.

2) ஆண்டிப்பட்டி, எட்டயபுரம், ஆரல்வாய்மொழி, அறந்தாங்கி, ஊத்தங்கரை மற்றும் அச்சன்குளம் ஆகிய இடங்களில் ஆறு கூட்டுறவு நூற்பாலைகள்.

3) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை.

4) தமிழ்நாடு சரிகை நிறுவனம் லிமிடெட், காஞ்சிபுரம்.

5) தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு.

6) தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர்.

7) தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட், சென்னை.

**2. துறையின் குறிக்கோள்கள்:–**

- அதிக அளவு கைத்தறி நெசவாளர்களை, கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வருதல்
- நெசவாளர்கள் மற்றும் ஜவுளித் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்

- ❖ நெசவாளர்கள் மற்றும் ஜவுளித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியம் கிடைப்பதற்கான வழிவகைகளை கண்காணித்தல்

- ❖ கைத்தறி நெசவாளர்களுக்கு நல்வாழ்வு, வளர்ச்சி மற்றும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் / திட்டங்களை செயல்படுத்துதல்

- ❖ கைத்தறித் தொழிலுக்கு கடன் வசதி மற்றும் நிதியுதவி வழங்கப்படுவதை கண்காணித்தல்

- ❖ கைத்தறி நெசவாளர்கள் மற்றும் இதர தொழிலாளர்களின் ஒட்டு மொத்த நலனை பாதுகாக்க பல்வேறு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவது

- ❖ தமிழ்நாட்டில் ஜவுளித் தொழிலின் உற்பத்தி மற்றும் விற்பனை செயல்பாடுகளுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்

- ❖ மாநில மற்றும் மத்திய அரசின் பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து ஜவுளி ஏற்றுமதிக்கு வழிவகை செய்தல்

- ❖ ஜவுளித் தொழிலில், தொழில் நுட்பத்தை மேம்படுத்தவும், உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் ஊக்குவித்தல்

- ❖ ஜவுளித் தொழிலின் அனைத்து உப பிரிவுகளின் வளர்ச்சிக்கான மனித வள மேம்பாடு, சுற்றுப்புற சூழலை பாதுகாத்தல் மற்றும் தொழிலாளர் நலனை பாதுகாத்தல்.

# நலத் திட்டங்கள்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் இனங்கள் | பயனாளிக்கு வழங்கப்படும் உதவித் தொகை விவரம் | தகுதியுள்ள பயனாளிகள் | விண்ணப்பிக்க கால அளவு | பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்ய எடுத்துக் கொள்ளும் கால அவகாசம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகம்/ அலுவலர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டம் (நெசவாளர்களுக்கான ஆயுள் காப்பீட்டுத் திட்டம்) | கைத்தறி நெசவாளர்களுக்கான ஆயுள் காப்பீட்டுத் திட்டம் | இயற்கை மரணம் – ரூ.60,000/–<br>விபத்தினால் ஏற்படும் மரணம் – ரூ.1,50,000/–<br>விபத்தினால் ஏற்படும் பகுதி ஊனம் – ரூ.75,000/–<br>விபத்தினால் ஏற்படும் நிரந்தர ஊனம் – ரூ.1,50,000/– | கூட்டுறவு அமைப்பில் உள்ள கைத்தறி நெசவாளர்கள், கூட்டுறவு அமைப்பு சாரா கைத்தறி நெசவாளர்கள் மற்றும் உபதொழில் புரிபவர்கள் | காப்பீடு துவங்கும் காலம் பிரதி வருடம் அக்டோபர் திங்கள் | 2 மாதங்கள் | சம்பந்தப்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க தலைவர்/ மேலாண்மை இயக்குநர் / சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை/உதவி இயக்குநர் |
| 2. | கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீடு திட்டம் (ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா (RSBY) திட்டத்தின் அடிப்படையில் | கைத்தறி நெசவாளர் குடும்பத்திற்கான நல்வாழ்வு காப்பீட்டு திட்டம் | உள் நோயாளிகளுக்கான மருத்துவச் செலவினம் ஆண்டொன்றுக்கு ரூ.30,000/–ம், புற நோயாளிகளுக்கான மருத்துவச் செலவினம் ஆண்டொன்றுக்கு ரூ.7,500/–ம் | கூட்டுறவு அமைப்பில் உள்ள கைத்தறி நெசவாளர்கள், கூட்டுறவு அமைப்பு சாரா கைத்தறி நெசவாளர்கள் மற்றும் உபதொழில் புரிபவர்கள் மற்றும் அங்கத்தினரது குடும்பத்தினர் | காப்பீடு துவங்கும் காலம் பிரதி வருடம் அக்டோபர் திங்கள் | பணம் செலுத்தாமல் மருத்துவ வசதி பெறுதல் | சம்பந்தப்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க தலைவர்/ மேலாண்மை இயக்குநர் / சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை/உதவி இயக்குநர் |
| 3 | தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம். | ரூ.1,000/- பிரதி மாதம் (அரசுக் கணக்கிலிருந்து ரூ.650/– மற்றும் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும் வட்டித் தொகையிலிருந்து ரூ.350/–) | ரூ.1,000/– பிரதி மாதம் | கூட்டுறவு அமைப்பின் கீழ் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக இருந்து, 60 வயதிற்குள் இறக்க நேரிட்டால், அவரது வாரிசுதாரருக்கு வழங்கப்படும் | மூன்று மாதங்கள் | இரண்டு மாதங்கள் | சம்பந்தப்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க தலைவர்/ மேலாண்மை இயக்குநர் / சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை/ உதவி இயக்குநர் |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் இனங்கள் | பயனாளிக்கு வழங்கப்படும் உதவித் தொகை விவரம் | தகுதியுள்ள பயனாளிகள் | விண்ணப்பிக்க கால அளவு | பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்ய எடுத்துக் கொள்ளும் கால அவகாசம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகம்/ அலுவலர் |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஒய்வூதியத் திட்டம் | ரூ.1,000/- பிரதி மாதம் (அரசுக் கணக்கிலிருந்து ரூ.800/– மற்றும் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும் வட்டித் தொகையிலிருந்து ரூ.200/–) | ரூ.1,000/– பிரதி மாதம் | கூட்டுறவு அமைப்பின் கீழ் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக இருந்து, 60 வயது பூர்த்தியான நெசவாளர்கள் | மூன்று மாதங்கள் | இரண்டு மாதங்கள் | சம்பந்தப்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க தலைவர்/ மேலாண்மை இயக்குநர் / சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை/உதவி இயக்குநர் |
| 5 | கைத்தறி நெசவாளர் களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் | கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் | கைத்தறி நெசவாளர்கள் உபயோகப்படுத்தும் மின்சாரத்தில் இரு மாதங்களுக்கு ஒரு முறை 200 அலகுகள் இலவசமாக வழங்கப்படும் | கைத்தறி நெசவாளர்கள் / உப தொழில் புரியும் தொழிலாளர்கள் | விண்ணப்பிக்க அட்டவணை இல்லை. | ஒரு மாதம் | சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர் / உதவி இயக்குநர் |
| 6 | விசைத்தறி நெசவாளர் களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் | விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் | விசைத்தறி நெசவாளர்கள் / உப தொழில் புரியும் தொழிலாளர்கள் உபயோகப்படுத்தும் மின்சாரத்தில் இரு மாதங்களுக்கு ஒரு முறை 750 அலகுகள் மின்சாரம் இலவசமாக வழங்கப்படும் | விசைத்தறி நெசவாளர்கள் / உப தொழில் புரியும் தொழிலாளர்கள் | விண்ணப்பிக்க அட்டவணை இல்லை. | ஒரு மாதம் | சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர் / உதவி இயக்குநர் |

## வளர்ச்சித் திட்டங்கள்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் இனங்கள் | பயனாளிக்கு வழங்கப்படும் உதவித் தொகை விவரம் (தொகை ரூபாயில்) | தகுதியுள்ள பயனாளிகள் | விண்ணப்பிக்க கால அளவு | பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்ய எடுத்துக் கொள்ளும் கால அவகாசம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகம்/ அலுவலர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | விரிவான கைத்தறி குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப மேம்பாட்டு திட்டம் மற்றும் தேசிய கைத்தறி வளர்ச்சி திட்டம் | 1) நான்கு கைத்தறிகளுக்கு ஒரு நியூமேட்டிக் ஜக்கார்டு இயந்திரம் | 40,000 | கைத்தறி நெசவாளர் | விண்ணப்பிக்க அட்டவணை இல்லை. | ஒரு மாதம் | தலைவர் / மேலாண்மை இயக்குநர், நெசவாளர் கூட்டுறவு சங்கம்<br><br>(அல்லது)<br><br>துணை இயக்குநர் / உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை |
| | | 2) ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள கைத்தறிக்கு மின்மோட்டார் உடன் கூடிய இயங்கும் ஜக்கார்டு இயந்திரம் | 15,000 | | | | |
| | | 3) ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள கைத்தறிக்கு தேவையான பற்சக்கரம் பொருத்தி தானியங்கி வார்ப்பு விடுவித்தல் மற்றும் நெசவு செய்த துணியை சுற்றுதல் இயந்திரம் | 5,000 | | | | |
| | | 4) ஊடை நூல் நாடா தாங்கும் பெட்டி பொருத்துவதற்காக | 3,000 | | | | |
| | | 5) ஒன்றுக்கு மேற்பட்ட புட்டா வாங்கும் இயந்திரம் | 7,000 | | | | |
| | | 6) இரண்டு இரக நெசவு செய்யும் இயந்திரம் (இயந்திரம் நிறுவுதல் தொகையும் சேர்த்து) | 5,000 | | | | |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் இனங்கள் | பயனாளிக்கு வழங்கப்படும் உதவித் தொகை விவரம் (தொகை ரூபாயில்) | தகுதியுள்ள பயனாளிகள் | விண்ணப்பிக்க கால அளவு | பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்ய எடுத்துக் கொள்ளும் கால அவகாசம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகம்/ அலுவலர் |
|---|---|---|---|---|---|---|---|
| | | 7) ஜக்கார்டு இயந்திரம் (அனைத்து உபகரணங்கள் மற்றும் பொருத்துதல் தொகை உட்பட) | 15,000 | கைத்தறி நெசவாளர் | விண்ணப்பிக்க அட்டவணை இல்லை. | ஒரு மாதம் | தலைவர் / மேலாண்மை இயக்குநர், நெசவாளர் கூட்டுறவு சங்கம் (அல்லது) துணை இயக்குநர் / உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை |
| | | 8) வடிவமைப்பு மர அச்சு இயந்திரம் | 5,000 | | | | |
| | | 9) அச்சு, பண்னை, விழுது, நாடா ஆகியவை பொருத்துவதற்காக | 4,000 | | | | |
| | | 10) பாவு சுற்றும் உருளை மற்றும் துணி சுற்றும் உருளை | 5,000 | | | | |
| | | 11) மேசைத் தறிகள்<br>அ. 60 அங்குலம் வரை<br>ஆ. 60 அங்குலத்திற்கு மேல் | 25,000<br>40,000 | | | | |
| | | 12) சாதாரண பாவு சுற்றும் இயந்திரம் | 20,000 | | | | |
| | | 13) மின்மோட்டார் பொருந்திய பாவு சுற்றும் இயந்திரம் | 35,000 | | | | |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் இனங்கள் | பயனாளிக்கு வழங்கப்படும் உதவித் தொகை விவரம் (தொகை ரூபாயில்) | தகுதியுள்ள பயனாளிகள் | விண்ணப்பிக்க கால அளவு | பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்ய எடுத்துக் கொள்ளும் கால அவகாசம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகம்/ அலுவலர் |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | விரிவான கைத்தறி குழும திட்டம் மற்றும் தேசிய கைத்தறி வளர்ச்சி திட்டம் – தறிக்கூடம் அமைத்தல் (20 சதுர மீட்டரில்) (வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு 100 % மத்திய அரசின் பங்கு, மற்றவர்களுக்கு 75:25 % மைய அரசு மற்றும் பயனாளிகளின் பங்கீடு | தறிக்கூடம் அமைத்தல் | ரூ. 70,000 | கைத்தறி நெசவாளரின் பெயரில் நிலம் இருக்க வேண்டும் | விண்ணப்பிக்க அட்டவணை இல்லை. | ஒரு மாதம் | தலைவர் / மேலாண்மை இயக்குநர், நெசவாளர் கூட்டுறவு நூற்பாலை (அல்லது) துணை இயக்குநர் / உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை |
| 3 | டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை | 33 பாடப் பிரிவுகளில் முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண் பெறும் மாணாக்கர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல் | 1) முதல் மதிப்பெண்ணிற்கு ரூ.4,000/– லிருந்து ரூ.7,500/– வரை<br>2) இரண்டாம் மதிப்பெண்ணிற்கு ரூ.2,500/– லிருந்து ரூ.5,000/– வரை | நெசவாளர் குழந்தை களுக்கு | தேர்வு முடிவு வெளியிடப் பட்டதிலிருந்த ஒரு மாதத்திற்குள் | ஒரு மாதம் | சம்பந்தப்பட்ட நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் தலைவர்/நிர்வாக இயக்குநர் (அல்லது) சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை/உதவி இயக்குநர் |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் இனங்கள் | பயனாளிக்கு வழங்கப்படும் உதவித் தொகை விவரம் (தொகை ரூபாயில்) | தகுதியுள்ள பயனாளிகள் | விண்ணப்பிக்க கால அளவு | பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்ய எடுத்துக் கொள்ளும் கால அவகாசம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகம்/ அலுவலர் |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | சேலத்தில் உள்ள இந்திய கைத்தறி தொழிற்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல் | சேலத்தில் உள்ள இந்திய கைத்தறி தொழிற்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர் களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல் | 1) முதலாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம்<br>2) இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1100/– வீதம்<br>3) மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1200/– வீதம் | சேலத்தில் உள்ள இந்திய கைத்தறி தொழிற்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள். | பயிலகத்தில் சேர்க்கப் பட்டதிலிருந்து ஒரு மாதத்திற்குள் | ஒரு மாதம் | சம்பந்தப்பட்ட சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை/உதவி இயக்குநர். |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் இனங்கள் | பயனாளிக்கு வழங்கப்படும் உதவித் தொகை விவரம் (தொகை ரூபாயில்) | தகுதியுள்ள பயனாளிகள் | விண்ணப்பிக்க கால அளவு | பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்ய எடுத்துக் கொள்ளும் கால அவகாசம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகம்/ அலுவலர் |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு பயிற்சி | **இனம்–1 :** மத்திய ஜவுளித் துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் நிறுவனங்கள் மற்றும் துணித் தொழில் ஆராய்ச்சி நிறுவனங்கள்<br><br>**இனம்–2 :** தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் செயல்படுத்துதல்<br><br>**இனம் –3 :** மாநில அரசின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் நிறுவனங்கள் | கீழ்கண்ட பிரிவுகளில் பயிற்சி கைத்தறி நெசவு, பெடல் தறி, சாயப் பயிற்சி, வடிவமைப்பு, விற்பனையாளர், மேலாண்மைப் பயிற்சி, நூற்பு பயிற்சி, விசைத்தறி பயிற்சி, துணியின் மேற்பகுதியை அலங்காரப் படுத்துதல், தரப்பரிசோதகர், இயக்குபவர் | ஜவுளித் தொழிலை சார்ந்தவர்களுக்கு | நிதி ஒப்பளிப்பு செய்ததிலிருந்து ஒரு மாதத்திற்குள் | ஒரு மாதம் | சம்பந்தப்பட்ட சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை/உதவி இயக்குநர். |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் இனங்கள் | பயனாளிக்கு வழங்கப்படும் உதவித் தொகை விவரம் (தொகை ரூபாயில்) | தகுதியுள்ள பயனாளிகள் | விண்ணப்பிக்க கால அளவு | பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்ய எடுத்துக் கொள்ளும் கால அவகாசம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகம்/ அலுவலர் |
|---|---|---|---|---|---|---|---|
| 6 | சிக்ஷா சஹாயக் யோஜனா கல்வி உதவித் தொகை | மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களின் குடும்பத்தில் உள்ள 2 குழந்தைகளுக்கு மட்டும் | 9 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை நான்காண்டுகளுக்கு கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,200/– வீதம் | மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்ட கூட்டுறவு அமைப்பில் உள்ள கைத்தறி நெசவாளர்கள், கூட்டுறவு அமைப்பு சாரா கைத்தறி நெசவாளர்கள் மற்றும் உபதொழில் புரிபவர்கள் | ஒவ்வொரு கல்வி ஆண்டும் ஜுன் மற்றும் ஜனவரி | இரண்டு மாதங்கள் | சம்பந்தப்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க தலைவர்/ மேலாண்மை இயக்குநர் / சரக கைத்தறி மற்றும் துணி நூல் துணை/உதவி இயக்குநர் |
| 7 | சிறந்த ஏற்றுமதியாளர் களுக்கு பரிசு வழங்குதல் | சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கு கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் ஆண்டொன்றுக்கு ரூ.1.00 இலட்சம் வழங்கப்படுகிறது. | பரிசுகள் மற்றும் கேடயங்கள் | அ) தனியார் ஏற்றுமதி யாளர்கள்<br>ஆ)கோஆப்டெக்ஸ்<br>இ) நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் | நிதி ஒப்பளிப்பு செய்ததில் இருந்து ஒரு மாத காலம் | ஒரு மாதம் | சம்பந்தப்பட்ட சரக துணை/உதவி இயக்குநர் |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் இனங்கள் | பயனாளிக்கு வழங்கப்படும் உதவித் தொகை விவரம் (தொகை ரூபாயில்) | தகுதியுள்ள பயனாளிகள் | விண்ணப்பிக்க கால அளவு | பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்ய எடுத்துக் கொள்ளும் கால அவகாசம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகம்/ அலுவலர் |
|---|---|---|---|---|---|---|---|
| 8 | புதிய வடிவமைப்பை உருவாக்கும் சிறந்த நெசவாளர் களுக்கு பரிசு வழங்குதல் | சிறந்த நெசவாளர்களுக்கு பண பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது, ஆண்டொன்றுக்கான செலவினம் ரூ.4,00,000/– ஆகும். | அ). முதல் பரிசு ரூ.5,000/–<br>ஆ) இரண்டாம் பரிசு ரூ.3,000/–<br>இ) மூன்றாம் பரிசு ரூ.2,000/– | பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் நெசவாளர்கள் | நிதி ஒப்பளிப்பு செய்ததில் இருந்து ஒரு மாத காலம் | ஒரு மாதம் | சம்பந்தப்பட்ட பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் தலைவர் / மேலாண்மை இயக்குநர் (அல்லது) சம்பந்தப்பட்ட சரக துணை/உதவி இயக்குநர் |
| 9 | சிறந்த நெசவாளர் களுக்கான விருது | ஆண்டொன்றுக்கு ரூ.1,00,000/–க்கான பணப்பரிசு மற்றும் சான்றிதழ் | சிறந்த நெசவாளருக்கு ரூ.1,00,000/– பணப்பரிசு | பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள நெசவாளர் | ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் 31 தேதிக்கு முன்னர் | ஒரு மாதம் | சம்பந்தப்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் தலைவர் / மேலாண்மை இயக்குநர் (அல்லது) சம்பந்தப்பட்ட சரக துணை/உதவி இயக்குநர் |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் இனங்கள் | பயனாளிக்கு வழங்கப்படும் உதவித் தொகை விவரம் (தொகை ரூபாயில்) | தகுதியுள்ள பயனாளிகள் | விண்ணப்பிக்க கால அளவு | பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்ய எடுத்துக் கொள்ளும் கால அவகாசம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகம்/ அலுவலர் |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | பிரதம மந்திரியின் நெசவாளர் களுக்கான முத்ரா திட்டம் | வட்டி மானியம் மற்றும் விளிம்புத் தொகை உதவியுடன் நெசவாளர்களுக்கு கடன் வழங்குதல் | தனி நபர் நெசவாளருக்கு ரூ.50,000/- முதல் ரூ.1,00,000./ வரை கடன் உதவி (20 % விளிம்புத் தொகை, ரூ.10,000/-க்கு மிகாமல் மற்றும் 6% முதல் 7% வட்டி மானியம்). | கைத்தறி நெசவாளர்கள் | விண்ணப்பிக்க அட்டவணை இல்லை | ஒரு மாதம் | சம்பந்தப்பட்ட சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை/உதவி இயக்குநர் |

## தமிழ்நாடு புதுமை முயற்சிகள் மற்றும் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் உள்ள திட்டங்கள்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பயனாளிக்கு வழங்கப்படும் உதவித் தொகை விவரம் (தொகை ரூபாயில்) | தகுதியுள்ள பயனாளிகள் | விண்ணப்பிக்க கால அளவு | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகம்/ அலுவலர் |
|---|---|---|---|---|---|
| 1 | மின்னணுவால் நியூமேட்டிக் முறையில் இயக்கப்படும் ஜாக்குவார்டு இயந்திரங்கள் | 1,20,000 | கூட்டுறவு சங்க உறுப்பினர் | ஒரு மாதம் | சம்பந்தப்பட்ட சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை/ உதவி இயக்குநர் |
| 2 | கைத்தறி நெசவாளர்களுக்கு நியூமேட்டிக் கருவியுடன் கூடிய கைத்தறி | 45,000 | | | |
| 3 | 6 கோல்கள் கொண்ட சாயத்தொட்டிகள் | 1,20,000 | | | |
| 4 | கழுவுதல் மற்றும் அலசும் இயந்திரம் | 12,000 | | | |
| 5 | கைத்தறிகளுக்கு மோட்டார் இணைக்கப்பட்ட சித்திர நெசவு இயந்திரங்கள் | 11,250 | | | |

**(அ) கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்கள் அலுவலகங்களை தொடர்பு கொள்ளும் முகவரி மற்றும் தொலைபேசி எண்**

| வ. எண் | அலுவலகத்தின் பெயர் மற்றும் முகவரி | தொலைபேசி எண் | தொலை அச்சு எண் |
|---|---|---|---|
| 1 | கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், குறளகம் இரண்டாம் தளம், சென்னை – 600 108. | 044-25341517<br>25340518 | 044-25342015<br>25351177 |
| 2 | கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர், எண் 824, கே.எஸ்.பார்த்தசாரதி தெரு, காமாட்சியம்மன் காலனி, ஓரிக்கை அஞ்சல், காஞ்சிபுரம் – 1. | 044-27238721 | 044-27220071 |
| 3 | கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர், புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், நான்காவது மாடி, சேலம் – 636 001. | 0427-2414745 | 0427-2413145 |
| 4 | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், எண் 26, லால்பகதூர் சாஸ்திரி சாலை, பெரியகுப்பம் (இரயில் நிலையம் அருகில்), திருவள்ளூர் – 1. | 044-27664092 | 044-27664092 |
| 5 | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், பிளாட் எண் 1165, தென்றல் நகர், வெங்கிகல் அஞ்சல், திருவண்ணாமலை – 606 604. | 04175-232620 | 04175-233261 |
| 6 | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், வேலூர் மாவட்ட ஊரக வளாகம் தெற்கு பகுதி அலுவலர்கள் லேன், வேலூர்–1. | 0416-2222547 | 0416-2222547 |
| 7 | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், எண் 8A1, சாலைக்கரை சாலை, செல்லன்குப்பம், கடலூர் O.T.– 607002.` | 04142-297973 | 04142-297973 |
| 8 | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், எண் 108/7A, துர்காலயா சாலை, திருவாரூர். | 04366-250765 | 04366-220041 |
| 9 | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், எண் 40, வாசுகி இல்லம், பக்தபுரி தெரு, கும்பகோணம் – 612 001. | 0435-2401736<br>2401737 | 0435-2460074 |
| 10 | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், எண் 23, பாரதி பூங்கா II குறுக்கு தெரு, சாய்பாபா காலனி, கோயம்புத்தூர் – 11. | 0422-2445601 | 0422-2430659 |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர் மற்றும் முகவரி | தொலைபேசி எண் | தொலை அச்சு எண் |
|---|---|---|---|
| 11 | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், எண் 426, பவானி பிரதான சாலை, அசோகபுரம், ஈரோடு – 4. | 0424-2291245<br>2293313 | 0424-2291701 |
| 12 | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், 504, திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், 5–வது மாடி, பல்லடம் சாலை, திருப்பூர்–4. | 0421-2215601 | 0421-4242601 |
| 13 | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், எண் 78, வடக்கு இரத வீதி, இரண்டாவது தளம், திருச்செங்கோடு. | 04288-252833 | 04288-255669 |
| 14 | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், எண் 125/4, திட்ட சாலை மெயின் ரோடு, வி.வி.ஜி. நகர், சேலம் மெயின் ரோடு, வெங்கமேடு, கரூர் – 6. | 04324-223080 | 04324-233904 |
| 15 | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், எண் 63, பஞ்சவர்ணசாமி கோவில் தெரு, உறையூர், திருச்சி – 3. | 0431-2760137<br>2762059 | 0431-2762059 |
| 16 | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், எண் 2/42–1 B, வசந்தபுரம் , மதுரை மண்டபம் சாலை, பரமக்குடி – 7. | 04564-226852 | 04564-228884 |
| 17 | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், எண் 25– C, நாகல்புதூர் 5வது தெரு, நாகல் நகர், திண்டுக்கல் – 3. | 0451-2440517 | 0451-2440101 |
| 18 | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், எண் 210, பாலம் நிலையம் சாலை, செல்லூர், மதுரை – 625 002. | 0452-2535669 | 0452-2535669 |
| 19 | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், சி.ஐ.ஏ. பிளாக் கட்டிடம், 2வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், பெருந்திட்ட வளாகம், விருதுநகர் – 2. | 04562-252708 | 04562-252079 |
| 20 | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், காவல் துறை ஆணையர் அலுவலக பழைய கட்டிடம், கொக்கிரக்குளம், திருநெல்வேலி – 627 009. | 0462-2531980 | 0462-2532192 |
| 21 | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், எண் 69, கிஷாஷ் நாஷில், தண்ணி தொட்டி சாலை, நாகர்கோவில் – 1. | 04652-278608 | 04652-278214 |

**(ஆ) துணை இயக்குநர் (அமலாக்கம்) / உதவி அமலாக்க அலுவலர்கள் அலுவலகங்களை தொடர்பு கொள்ளும் முகவரி மற்றும் தொலைபேசி எண்**

| வ. எண் | அலுவலகத்தின் பெயர் மற்றும் முகவரி | தொலைபேசி எண் | தொலை அச்சு எண் |
|---|---|---|---|
| 1 | துணை இயக்குநர் (அமலாக்கம்), கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலகம், குறளகம், இரண்டாம் தளம், சென்னை – 600 108. | 044-25341517<br>25340518 | 044-25342015 |
| 2 | உதவி அமலாக்க அலுவலர், 4வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சேலம் – 636 001. | 0427-2417745 | 0427-2413145 |
| 3 | உதவி அமலாக்க அலுவலர், எண் 21/9, கக்கன் தெரு, செனாய் நகர், மதுரை – 625 020. | 0452-2526116 | 0452-2535669 |
| 4 | உதவி அமலாக்க அலுவலர், எண் 9, வேலு நிலையம், காந்திஜி சாலை, செங்குந்தபுரம் காலனி வளைவு, சூரம்பட்டி அஞ்சல், ஈரோடு-638 009. | 0424-2275142 | 0424-2275142 |
| 5 | உதவி அமலாக்க அலுவலர், எண் 601 முதல் 603 வரை, 6–வது மாடி, திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், பல்லடம் ரோடு, திருப்பூர் – 641 604. | 0421-2971195 | 0421-4242601 |
| 6 | உதவி அமலாக்க அலுவலர், எண் 34, ரங்கசாமி பிள்ளை முதல் தெரு, தொண்டிகரடு, திருச்செங்கோடு – 637 211. | 04288-258139 | 04288-255669 |

**(இ) நிறுவனங்களை தொடர்பு கொள்ளும் முகவரி மற்றும் தொலைபேசி எண்**

| வ. எண் | அலுவலகத்தின் பெயர் மற்றும் முகவரி | தொலைபேசி எண் | தொலை அச்சு எண் |
|---|---|---|---|
| 1 | மேலாண்மை இயக்குநர், தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் (கோ—ஆப்டெக்ஸ்), பாலசுந்தரம் கட்டிடம், 350, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை – 600 008. | 044-28193371<br>28192284 | 044-28192464 |
| 2 | மேலாண்மை இயக்குநர், தமிழ் நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், குறளகம், இரண்டாம் தளம், சென்னை – 600 108. | 044-25331211 | 044-25331221 |
| 3 | மேலாண்மை இயக்குநர், தமிழ் நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கழக வணிக வளாகம், 3வது தளம், டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர் – 641 018. | 0422-2380385<br>2380386 | 0422-2380387 |
| 4 | மேலாண்மை இயக்குநர், தமிழ் நாடு சரிகை ஆலை லிமிடெட், தொழில் பேட்டை, ஓரிக்கை, காஞ்சிபுரம் – 631 502. | 044-27237621 | 044-27237181 |
| 5 | மேலாண்மை இயக்குநர், தமிழ் நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, எண் 428, பவானி பிரதான சாலை, ஈரோடு-4. | 0424-2293907 | 0424-2293528 |
| 6 | பொது மேலாளர், தமிழ் நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்), குறளகம், இரண்டாம் தளம், சென்னை – 600 108. | 044-25341719<br>25331104 | - |
| 7 | மேலாண்மை இயக்குநர், கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை லிமிடெட், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி – 635 207. | 04341-220667 | 04341-220667 |
| 8 | மேலாண்மை இயக்குநர், பாரதி கூட்டுறவு நூற்பாலை லிமிடெட், விளாத்திக்குளம் சாலை, எட்டயபுரம், கோவில்பட்டி வட்டம், தூத்துக்குடி – 628 902. | 04632-271270 | 04632-271270 |
| 9 | மேலாண்மை இயக்குநர், கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை லிமிடெட், ஆரல்வாய்மொழி – 629 301. | 04652-263126 | 04652-263280 |
| 10 | மேலாண்மை இயக்குநர், புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை லிமிடெட், அறந்தாங்கி, புதுக்கோட்டை–614 616. | 04371-224624 | 04371-224623 |
| 11 | மேலாண்மை இயக்குநர், அண்ணா கூட்டுறவு நூற்பாலை லிமிடெட், ஆண்டிப்பட்டி, தேனி – 625 512. | 04546-242905 | 04546-242270 |
| 12 | மேலாண்மை இயக்குநர், இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை லிமிடெட், அச்சன்குளம் அஞ்சல், அபிராமம் (வழி), கமுதி, இராமநாதபுரம்–623 601. | 04576-265577 | 04576-265566 |

## ஈ) தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–இன் கீழ் தகவல் பெறுதல்

| **வ. எண்** | **அலுவலகத்தின் பெயர்** | **பொது தகவல் வழங்கும் அலுவலர்** | **மேல் முறையீட்டு அலுவலர்** | **தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகம்** |
|---|---|---|---|---|
| 1 | தலைமையிடம் | இணை இயக்குநர் (கைத்தறி) | கைத்தறி மற்றும் துணிநூல் கூடுதல் இயக்குநர் | கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலகம், குறளகம், இரண்டாம் தளம், சென்னை – 600 108. |
| 2 | சரக அலுவலகங்கள் | துணிநூல் கட்டுப்பாடு அலுவலர் / கைத்தறி அலுவலர் (பணியாளர் மற்றும் நிர்வாகம்) | சம்பந்தப்பட்ட சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர் / உதவி இயக்குநர் | சம்பந்தப்பட்ட சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர் / உதவி இயக்குநர் அலுவலகம். |